தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனர்

கிழமை இதழ்

தொகுதி-3 | தி.பி. 2016 | மீனம் 18 (31-3-85) | 65 காசுகள் | இதழ் எண்: 54 | பகுதி 89

தமிழக அரசு தமிழீழப் போராட்டத்திற்குப் பொது மக்கள் படையை அனுப்பவேண்டும்!

தில்லி உதவியை இனியும் எதிர்பார்ப்பது அறியாமை; அடிமைத்தனம்!

தமிழினம் தன்னைத்தானே காக்கும் துணிவைப்பெறுக!

தமிழக அமைச்சர்கள் அனைவரும் கோழைகள்; இனப்பகைவர்கள்! நலம் விரும்பிகள்! இவர்களால் ஒன்றுஞ் செய்யமுடியாது!

தமிழின முன்னேற்றத்திற்கு இவர்கள் பயன்படமாட்டார்கள்!

இளைஞர்கள் எழுச்சி பெறுதவரை தமிழ் இனத்தை மேம்படுத்தமுடியாது!

முதிய தலைவர்களை நம்பி இனிப் பயனில்லை!

தமிழினமே எழுச்சி பெறுக!

பாவலரேறுவின் புரட்சி அறிக்கை!

இலங்கை சென்ற வெளியுறவுச் செயலர் ரமேசு பண்டாரியும், அங்குள்ள தமிழினப் பகையரசும் கூடிப்பேசி, இலங்கைக்குச் சார்பான ஓர் அறிக்கையை இந்திய அரசின் பெயரால் வெளியிட்டுள்ளனர். அதில், சிங்கள - தமிழீழச் சிக்கலுக்கு ஒற்றுமையும் ஒருமைப்பாடும், ஓர் அரசு ஆளுமையுமே தேவை என்பது வலியுறுத்தப் பெற்றுள்ளது. இது தமிழர்களுக்குத் தில்லி செய்யும் இரண்டகம்! வஞ்சகம்! கொடுமையிலும் கொடுமை? இதைத் தமிழினத் தலைவர்கள் எனப்படுவோர் ஒன்று கூடி முறியடிக்க வேண்டும்!

தில்லி யாட்சியர் மீண்டும் இணக்கமான பேச்சு என்னும் முறையில் தமிழினத்தைக் குழிதோண்டிப் புதைக்கவே முற்பட்டு விட்டனர் என்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது.

இத்தனையாயிரம் தமிழர்களின் கொலைக்குப் பின்னும், ஏறத்தாழ ஓரிலக்கம் இலங்கைத் தமிழ் ஏதிலிகளின் வரவுக்குப் பின்னும், பல நூறு பெண்களின் கற்பழிப்புக்கும், பல்லாயிரம் இளைஞர்களின் உயிர்ச் சிதைவுகளுக்கும் பின்னும், தில்லி இன்னும் மாந்தக் கொலையாளி செயவர்த்தனவிடம் மனங் கோணமல் பேசவேண்டும் என்றே எண்ணிக் கொண்டிருக்குமானல், தமிழீழ விடிவு எங்குதான் உள்ளது? எப்பொழுதுதான் நிகழும்? இதை இங்குள்ள தமிழினத் தலைவர்களும், இளைஞர்களும் மிகத் தீவிரமாகச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது.

கொன்று குவிக்கப்படும் நிலை இன்னும் தீர்ந்தபாடில்லை. இங்குள்ள அனைவரும் பேசிப் பேசியே இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு தீர்வை எதிர்பார்க்கின்றனர். இங்குள்ள அ. தி மு. க. அரசும் தான் பதவியில் அமர்ந்ததே போதும் என்று. மீண்டும் திட்டங்கள் தீட்டுவதும் பொருளை ஒதுக்குவதும், அவற்றல் கொள்ளை யடிப்பதும் போன்ற வழக்கமான செயல்களிலேயே கருத்தைச் செலுத்துவதும், காலத்தைக் கடத்துவதும் ஆக உள்ளது. உருப்படியான ஒரு தீர்மானமோ தீர்வோ திட்டமோ தமிழீழச் சிக்கலைப் பொறுத்த வரையில் அது வெளியிடவில்லை. அது வெளியிடும் என்றும் இனி நாம் எதிர்பார்க்கமுடியாது.

தமிழக அமைச்சர்கள் அனைவரும் கோழைகளே! அவர்கள் இனப் பகைவர்களே என்பதும், தந்நலம் விரும்பிகளே என்பதும் தெரிந்துவிட்டன. இவர்களால் இனித் தமிழினத்திற்கென்று எதுவும் செய்ய முடியாது. தமிழினத்திற்கு இவர்கள் என்றுமே பயன்பட மாட்டார்கள் என்பது முடிவாக விளங்கி விட்டது. இனிமேலும் நாம் தில்லியின் உதவியைப் பெறுவதென்பது அறியாமையும் அடிமைத்தனமுமே ஆகும். தமிழினம் தன்னைத்தானே காத்துக்கொள்ள அணியமாகி விடவேண்டும்; அத்தகைய துணிவைப் பெறவேண்டும். இங்குள்ள இளைஞர்கள் எழுச்சி பெறுதவரை தமிழினத்தை என்றுமே மேம்படுத்த முடியாது. இங்குள்ள முதிய தலைவர்களும் இனிப் பயன்பட மாட்டார்கள்.

எனவே தமிழக அரசு தமிழீழப் போராட்டத்தில், தானே ஈடுபடவேண்டும் வங்க அரசின் **முக்தி வாகினி** படையைப்போல், ஒரு பொதுமக்கள் படையை உடனே கட்டமைக்க வேண்டும். அதை இலங்கைக்கு அனுப்பவேண்டும் இதற்கென எவர் ஆணைக்கும் காத்திருக்க வேண்டியதில்லை. தாறுமாருக ஏதாவது நடப்பின் உடனே **தனித்தமிழ நாட்டு விடுதலையை** வெளிப்படையாக அறிவித்து விடவேண்டும், தமிழினமே எழுச்சி பெறுக! நாம் ஒருங்கிணைந்து நம் உரிமைகளை நாமே காத்துக் கொள்ளும் காலம் வந்துவிட்டது! மேலும் காலம் தாழ்த்திக் கொண்டிருப்பது, நம்மை நாமே அழித்துக்கொள்வதாகும்! எண்ணுக! இயங்குக!

— பெருஞ்சித்திரனர்.

தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு உ. த. மு. க. உதவி!

பணம் உரு. 17,437; துணிமணிகள் 10,000 உருப்படிகள்; அரிசி 10 மூட்டை தண்டிக் கொடுக்கப்பெற்றன!

திருச்சி உ.த.மு.க.-வினரின் பெரும்பணி!

1976-77 - ஆம் ஆண்டிலிருந்து, இந் நாட்டில் தமிழீழ விடுதலைப் போராளிகளை வரவேற்று, அடைக்கலம் கொடுத்து வாழ்வித்து வந்தது தென்மொழி இயக்கமே! தொடக்கத்தில் இங்கு வந்த முகுந்தன், பிரபாகரன், காசி ஆனந்தன், சேனாதி இராசா, ஊர்மிளா, அமிர்தலிங்கம் - மங்கையர்க்கரசி இணையர், சந்திரகாசன், ஈழவேந்தன, கோவை மகேசன், இராசசுந்தரம் போன்றோரை வரவேற்று, அவர்களின் பாசறை முயற்சிகளுக்குக் களம் அமைத்துக்கொடுத்த முதல் இயக்கமே தென்மொழி இயக்கம்!

அதுவுமன்றித் தமிழீழத்தைப் பற்றியும் அவர்களின் போராட்டங்களின் முழு வரலாறு பற்றியும் தென்மொழியே தொடக்கத்தில் பக்கம் பக்கமாகச் செய்திகளை வெளியிட்டு அவர்களின் இயக்கம், போராட்டம் பற்றிய அனைத்து நிலைகளையும் இத் தமிழ்நாட்டு மக்களுக்கு விளக்கப் படுத்தியது

ஆனால், இக் கடமைகளை விளம்பர நோக்கத்திற்காக நாம் என்றும் பயன்படுத்திக் கொண்டது இல்லை. திருவொற்றியூர் வட ஆர்க்காடு, புதுக்கோட்டை முகவை திருப்பூர், ஈரோடு, பல்லடம், கோவை, பவானி, கீழக்கரை, கோடிக்கரை, பறம்புக்குடி, போன்ற பல ஊர்களிலும் இன்னும் தமிழீழப் போராளிகளுக்குத் தென்மொழி அன்பர்களும், உ. த: மு. க. அன்பர்களும் பலவகையிலும் அவர்களுக்கு ஆதரவாக இருந்து இயங்கி வருகின்றனர்: ஈழப் போராளிகளில் தென்மொழிப் பாசறைக்கு வராதவர் எவருமிரார். ஆனால் இந் நடவடிக்கைகளை யெல்லாம் என்றுமே விளம்பரப்படுத்தி, அவர்களின் விடுதலைச் சூட்டில் நாம் குளிர்காய விரும்பியதில்லை

ஆனால், இன்றுள்ள அரசியல் கட்சிகளும், தனிப்பட்ட பொது இன நல இயக்கங்களும் அவர்களை வைத்துத் தங்கள் பெயர்களையும், பெருமைகளையும் கொட்டை எழுத்துகளில் விளம்பரப் படுத்திக் கொள்வதைப் பார்த்தால், அந்தோ தமிழினமே என்று இரங்க வேண்டியிருக்கின்றது

தொடக்கத்திலிருந்து, அவர்களின் இயக்கம் நடமாட்டம் தங்கல், உணவு, படைக் கருவிகள் முதலிய வகைகளில், தென்மொழி இயக்கத்தவர் துணை நின்றதற்கு அளவே இல்லை. நன்றி மறந்தால் தவிர, அவர்களும் இதை மறக்க முடியாது ஆனால், இதைப் பற்றியெல்லாம் நாம் எள்ளளவும் கவலைப் பட்டதில்லை. மாறாக, அவர்களுக்கு, இன்று பலரும் போட்டி போட்டுக்கொண்டு உதவுவது நமக்கெல்லாம் பெருமையாகவே உள்ளது.

ஆனால், நம் இயக்கத்தவர்கள் சிலரை; வேறு தோழமை இயக்க அன்பர்கள் சிலர் ஆங்காங்கே, 'ஈழப் போராளிகளுக்கு உங்கள் இயக்கம் எந்த வகையில் உதவி செய்கிறது' என்று கேட்டு வருகின்றனர் என்று செய்திகள் வருகின்றன அவர்களுக்கு விளக்கம் தரவே, இதுபோலும் செய்திகள், செயற்பாடுகளை நாங்கள் வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டிய கடப்பாட்டுக்கு உள்ளானோம்.

மற்றபடி நாம் அவர்களுக்குச் செய்துவரும் உதவிகளை விளம்பரப்படுத்திக் கொள்ளும் நோக்கமோ அதன்வழி அவர்களின் உண்மையான விடுதலைப் போராட்டத்திற்குப் பெருமைக் குறைவை உண்டாக்க வேண்டும் என்னும் எண்ணமோ எங்களுக்கில்லை. அந் நிலை தேவையுமில்லை.

ஆனால், குண்டூசியைக் கோணூசியாக்கியும், துரும்பைத் தூணாக்கியும், பேனைப் பெருமாள் ஆக்கியும், விளம்பரமே இயக்கமாக இயக்கமே பிழைப்பாகக் கொண்டியங்கும் நம்நாட்டுக் கட்சிகளும் தலைவர்களும் உண்மை உணரவேண்டும் என்னும் அன்பு நோக்கமே எங்களிடையில் வேண்டுவது என்று நாங்கள் நன்கு உணர்ந்திருக்கிறோம். பிற செய்திகளைத் தேவையான இடத்தில் பேசுவோம்.

எப்படியாகிலும் எந் தமிழினம் இவ்வுலக உருண்டையில் எந்த ஒரு நாட்டிலாகிலும் ஓர் அரசுரிமை பெறவேண்டுமென்பதே எங்கள் முழு நோக்கமாகும் அதற்கு மூச்சுள்ள வரையிலும் உழைப்போம்; உழைத்துக்கொண்டே யிருப்போம். இனி, இதுபோலும் செய்திகள் தமிழ்நிலத்தில் அவ்வப்பொழுது வரும்,

அலுவலகச் செயலர்

திருவெறும்பூர் தமிழ்நாடு மாணவர் இல்லத் தினருகே 27—2 65 முதல் 12—3—75 வரை ஈழத் தமிழர்ப் படுகொலைக் கண்காட்சியும் படக்காட்சியும் தமிழீழ மாணவர் பேரவையினரால் நடத்தப் பெற்றது. 'பெல்' தொழிலகப் பகுதிகளில் நன்கு விளம்பரம் செய்யப் பெற்றதால் நாள்தோறும் நூற்றுக் கணக்கானோர் கண்காட்சிப் படக் காட்சிகளைப் பார்த்து மனம் உருகி, தங்களாலியன்ற பொருளுதவிகளை அளித்துதவினர். ஊதிய நாளான 2—3—85 அன்று தொழிலக வாயில்களிலும், வைப்பகப் பகுதிகளிலும் தமிழீழ மாணவர்கள் பதாகையுடன் நின்றிருந்தனர். தொழிலகத் தோழர்கள் நாள் முழுவதும் அன்பளிப்புச் செய்த வண்ணம் சென்றுகொண்டிருந்தனர். கைலாசபுரம், அம்பேத்கார் நகர், காமராசபுரம், 'பெல் பூர்', 'பெல் நகர்', கணேசபுரம் பகுதிகளில் வீடு வீடாகத் தமிழீழ மாணவர்கள், உ.த.மு.க. அன்பர்களுடன் சென்று தண்டல் செய்தனர். ஒவ்வொரு வீட்டிலும் பணம், துணி அரிசி வழங்கினர். இந் நாட்களில் நன்கொடையாகப் பணம் உரு: 17437 35-உம், துணிகள் 10,000 உருப்படிகளும், 10 மூட்டை அரிசியும் கிடைக்கப்பெற்றன. மேலும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழக வெளியீடுகள் வழியும் நன்கொடை வந்தன. திரு. குழந்தை ஈகவரசன் அவர்கள் ஊரகப் பகுதிகளில் ஈழத் தமிழரின் இன்னல்களைப்பற்றி பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாடல்களை இசைத்துப் பாடியது அனைவரின் நெஞ்சையும் உருகச் செய்தன 2—3—85 அன்று தொழிலாளர் முன்னேற்ற சங்கம், அண்ணா தொழிலாளர் சங்கம், சி. ஐ டி. யு முதலிய அமைப்புகள் நன்கொடைத் தண்டலுக்குப் பல்வேறு வகையில் உதவின. திருவாளர்கள்: கி இமயவரம்பன், துரையரசன், ஈகவரசன் முதலிய உ.த.மு.க அன்பர்கள் இரவு பகல் பாராது தண்டல் செய்தும், ஒலிபரப்ப செய்தும், உடை வண்டியை தள்ளிச்சென்றும் பணியாற்றினர்.

இந் நிகழ்ச்சிகளை யெல்லாம் ஒழுங்கு செய்து வெற்றிகரமாக நடத்தத் துணையாய் இருந்து பணியாற்றிய, திருச்சி மாவட்ட உ.த.மு.க. செயலர் திரு. தாரா. மகிழ்நனின் உழைப்பு பெரிதும் பாராட்டத் தக்கதாகும். தமிழீழ மாணவர் பேரவைச் செயலர் திரு. இரவிவர்மா அவர்களும், திரு. அசோகன் அவர்களும் ஈழ மாணவர்களுக்கு நாள்தோறும் பணிகளைப் பகிர்ந்து கொடுத்தனர். விரைவில் திருவெறும்பூரில் நன்றி அறிவிப்புக் கூட்டம் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகச் செயலாண்மையர் திரு உமாமகேசுவரன், பாவலரேறு பெருஞ்சித்திரனார், அறிஞர் அருளி, துணைப் பொதுச் செயலாளர் தென்னவன்கோ, த.ம.வி. கழக கொள்கை பரப்புச்செயலர் திரு. வாசு ஆகியோர் கலந்துகொள்ளும் கூட்டம் நடைபெறவுள்ளது.

- இக்கண்காட்சி நடைபெற்ற காலத்தில் அனைத்து அன்பர்களும், கட்சி வேறுபாடின்றி தமிழின உணர்ச்சியுடன் தமிழீழ விடுதலை அமைப்புக்கு நன்கொடை, அன்பளிப்பு செய்துதவினர் என்பது நாம் அனைவரும் நினைந்து மகிழத் தக்கதாகும்.

செய்தித் தொகுப்பு: குழந்தை ஈகவரசன்.

ஒரு கருத்துமடல்:

தேர்தல் முடிவுகள் மாற்ற முடியாதவை அல்ல!

அன்பிற்குரிய ஐயா,

தமிழ்நிலம் இதழ் எண் 51-இல் வெளியான பாவலரேறு அவர்தம் கட்டுரைகளும், தென்மொழி நா. இளமாறன் அவர்தம் கட்டுரையிலுள்ள தி.மு.க. தொடர்பான கருத்துகளும் எம்முள் ஏற்படுத்திய எண்ண அலைகளை இவண் தருகிறோம்.

இதனை எமது தனிக் கருத்தாக எண்ணுதல் வேண்டாம். இதுபோன்ற எண்ணம் பலரிடத்தும் இருத்தலைக் கண்ட பின்னரே இதனை எழுத முடிவு செய்தோம்.

முதற்கண் பாவலரேறு அவர்தம் கட்டுரை வழி வெளிப்பட்டுள்ள கருத்துகளைப் பற்றிய எண்ணங்களைத் தருகிறோம்.

'நம் நாட்டுத் தேர்தல் முடிவுகள்தாம் கற்பனைக்கும் பகுத்தறிவுக்கும் பொருந்தாதவை! என்றாலும் தேர்தல் முடிவுகள் என்பது அப்படி ஒன்றும் நம் அறிவுக்குப் புரியாத புதிர்கள் அல்ல' என்று பாவலரேறுவின் கட்டுரையில் வெளியான கருத்துக் குறித்து எமக்குத் தெளிவாகப் புலப்படவில்லை.

தேர்தல் முடிவுகளைக்கொண்டு கலைஞர் மு. கருணாநிதியின் மீது மக்கள் நம்பிக்கை வைக்கவில்லை என்று கூறுவது 'பாமர'த்தனமாகவே படுகிறது. மக்கள் நம்பிக்கை என்பது ஒப்போலை (வாக்கு)ச் சீட்டுகளின் எண்ணிக்கையா? அல்லது சட்டமன்ற உறுப்பினர் எண்ணிக்கையா? ஒப்போலைச் சீட்டுகளைக் கருத்திற் கொண்டால் நம்பிக்கை கூடியிருக்கிறதே தவிர குறையவில்லை என்பதை அனைவருமே ஒப்புவர்.

பணம்—விளம்பரம்—வானொலி, தொலைக்காட்சி இவற்றின் மூலம் இந்திரா கட்சி வென்றதென்றால் அவையின்மையால் தி.மு.க. தோற்றது என்பது தானே பொருள். அதை விடுத்து, திமுக தோற்றதற்கு அதன் அணுகுமுறை காரணம் என்பது எவ்வாறு மெய்யாகும்? அப்படியானால் ஒட்டுமொத்தமாய் இந்தியாவில் எதிர்க்கட்சிகளின் அணுகுமுறையே தவறென்பதா? தெலுங்கு தேசம் கட்சியின் வெற்றியை எப்படிக் கணிப்பது?

தி.மு.க. தமது அரசியல் துறையை விட்டு விட்டு உ.த.மு.க.வின் பக்கம் வரவேண்டும் என்ற அவா தங்களுக்கு இருக்கும்போல் தோன்றுகிறது. தவறன்று. ஒத்த நோக்கினர் ஒன்றுபடல் சிறப்பே! அதற்காக அவரவர் துறையை விட்டுவிட்டு விட வேண்டும் என்பது முறையாகுமோ?

தி.மு.க. அரசியல் துறையை விட்டு வெளியேறுமேயாயின் தோன்றும் வெற்றிடம் எவரால் நிரப்பப்படும்? அரசியல் துறையில் இனவுணர்வு பற்று எண்ணும் நிலையில் இருப்பது தி.மு.க. மட்டுமே என்பதை நீங்களும் ஒப்புவீர்கள் என்று எண்ணுகிறேன்.

இரண்டாவதாகத் தென்மொழி நா. இளமாறன் கட்டுரையில் தி.மு.க.வின் மீது பல்வகையான

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ விடுதலைக்கு அனைவரும் உதவுக!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3 இதழ் எண் : 54 (31-3-5) பகுதி 8-9

இயக்க அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

தீவிரக் கருத்துப் பரப்புதல்கள் வேண்டும்!

அன்பு நெஞ்சங்களே!

தமிழர்களின் எதிர்காலம் மிகவும் கேடான நிலையில் கீழிறங்கிக் கொண்டுள்ளது. உயர்ந்த நோக்கங்களை நோக்கி எந்த ஒரு சிறு முயற்சி செய்யப் பெற்றாலும், அதனை நம் இனத்தவர்களே எதிர்ப்பதும், முறியடிப்பதும், புறக்கணிப்பதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. **ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுக்கால அடிமையும் அறியாமையும், இனப்பற்றின்மையும், முன்னேற்ற முளைகளையே கருக்கிவிட்டன. தமிழர்களே தமிழினத்தின் பகைவர்களாக மாறிவிட்டனர்.** மிகப்பலர் தம்மைத் தமிழர்கள் என்றே நினைப்பதும் இல்லை; நினைத்தாலும் நடந்து கொள்வதில்லை; நடந்துக் கொண்டாலும் சுற்றியுள்ள பலர் அதை ஆதரிக்காமையால் மனஞ்சோர்ந்து போகின்றனர். பின்னர் மாற்றார்க்கே துணையாக நின்று, தங்கள் வாழ்க்கை நடந்தால் போதுமென்று செயல்படுகின்றனர்.

இந்நிலையில், ஒரு கொள்கையை வைத்துப் பேதிய வசதிகளற்ற நிலையில், பொதுவுணர்வுடன், தமிழின முயற்சிக்குப் பாடுபடும் அத்தனை முயற்சிகளும் விழலுக்கிறைத்த நீராகவே வீணுகின்றன. இவற்றில் ஈடுபடும் பொதுநல, இன நோக்குக் கொண்ட சிலரும், விரைவில் மனஞ் சோர்ந்துபோய், தாம் உண்டு, தம் கருத்துண்டு என்னும் போக்கில், தோல்வி மனப் பாங்குடன் உலவி வருகின்றனர். ஆனல் மிகப் பலர், இனநல முயற்சிகளுக்கு உள்ள ஒரு சில வரவேற்புகளையும், வருவாய்களையும் பார்த்து, அவற்றை, ஏதோ தம் அறிவு நலத்துக்கும் பொது முயற்சிகளுக்கும் கிடைக்கும் பெருமைகள் என்று கருதி, மக்களை ஏமாற்றிப் பொருளீட்டிக் குவிக்கின்றனர். இந்நிலைகளைக் காணும் சிலர் மனம் வெம்பி, வெதும்பி, எதிலும் ஈடுபடாமலேயே ஒதுங்கியிருந்து விடுகின்றனர்,

இவ் வத்தனை நிலைகளும் நம் அறியாமையாலும், காழ்த்துப் போய்விட்ட அடிமை உணர்வாலும் ஏற்படுவனவே. எனவே, நம் இயக்க அன்பர்கள் தீவிர உணர்வுகளுடனும், இரக்கத்துடனும், எதிர்கால நம்பிக்கையுடனும், உள்ள உறுதியுடனும், அறிவுக் கூர்மையுடனும் மக்களை அணுகவும், அவர்களிடம் நம் இயக்கத்தின் கொள்கைகளையும் கடந்த கால முயற்சிகளையும், அவை முழுமையடைய வேண்டிய தேவைகளையும், அவற்றுக்காக நாம் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளையும் முறையாக எடுத்துச்சொல்லி, அவர்களின் அறியாமையையும், அடிமை உணர்வையும், மனச் சோர்வையும், உடல் சோம்பலையும் போக்கி, எதிர்கால இன முன்னேற்ற முயற்சிகளில் முடிந்தால் ஈடுபடுத்தவும், இல்லெனில், ஆதரிக்கவும் அவர்களை ஆற்றுப் படுத்தவும் வேண்டும்.

இவ்வாறு மக்களை அணுகவும், ஆற்றுப்படுத்தவும் ஆர்வம் உள்ள **உ. த. மு. க.** இயக்க அமைப்பாளர்களும், ஆர்வலர்களும், மற்றும் **தென்மொழி, தமிழ்நிலம்** அன்பர்களும், **தமிழ்ச்சிட்டு** மாணவர்களும், ஆங்காங்கு ஒருங்கிணைந்து கலந்து பேசிப் பல குழுக்களை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். அக் குழுக்களுக்கு அமைப்பாளர்கள் பெயர் கொடுத்து, வடிவம் அமைத்து, இயங்க வைத்தல் வேண்டும். அவை பற்றிய செய்திகளையும், செயற்பாடுகளையும் தலைமையகத்துக்கு விடுத்து வைப்பின், அவற்றை இதழ்களில் வெளியிட்டு, அவர்களின் ஆர்வத்திற்கும், ஈடுபாட்டிற்கும் ஊக்கமும், உயிர்ப்பும் தரப்பெறும். அவர்கள் செய்யவேண்டுவதெல்லாம் - கிழமைக் கொருமுறை அல்லது மாதம் ஒருமுறை, நம் **தமிழ் நிலம் தென்மொழி** இதழ்களில் வெளிவந்த-வருகின்ற கருத்துகளைத் திரட்டிப் பல்லாயிரக் கணக்கில் அறிக்கைகளாக அச்சிட்டு, அண்டை அயல் ஊர்களுக்குக் குழுக் குழுவாகச்சென்று, அவற்றை பரப்பவும், சிறு சிறு கூட்டங்கள் கூட்டிப் பேசவும் செய்தல் வேண்டும். அவ்வாறு திரளும் குழுக்கள் நிலைகளை அலுவலத்துக்குத் தெரியப் படுத்தினால், போதுமான வாய்ப்புகளை அவர்களுக்கு அலுவலகம் ஏற்படுத்திக் கொடுக்கும். இன்றே அதுபற்றி அன்பர்கள் எண்ணிப்பார்க்க! இயன்றவை செய்க! எழுக! இயங்குக! எளிதில் இல்லை. இன முன்னேற்றமும், உரிமை மீட்பும், விடுதலைப் பேறும்! **வெல்க நும் முயற்சிகள்!**

— **கழக முதல்வர்.**

நம் இயக்கத்தின் உண்மை நிலைகள்-3

- கழக முதல்வர் -

அன்பர் ஒருவரின் கருத்துரை

ஐயா அவர்கட்கு வணக்கம்.

நீங்கள் இருபதாம் நூற்றாண்டின் பின்பாகத்தில் தமிழகத்து வரலாற்றில் மிகப்பெரிய மாந்தர்தாம். தாங்கள் எழுத்திற்கிருந்த ஆற்றல் இக்காலத்தில் எவரின் எழுத்திற்குமிருந்ததில்லைதான். இளைஞர்களின் உள்ளங்களில் எரிமலையாகத்தான் எழுந்து நின்றீர்கள். இவையாவும் உலகம் அறிந்தவை. இவ்வாறிருக்க, உங்களைப்பற்றியே உங்களுக்கு ஐயம் வந்ததேன்? கோ. து. பெரியவரும் பிறரும் உங்கள்பால் காட்டிய மதிப்பினைப்பற்றி நீங்களே எழுதுவதனால் என்ன பயன? அவர் மதிப்பு—அன்று உங்களிடம் வைத்ததால், அவர் பெருமை தேடிக்கொண்டாரே தவிர உங்களுக்கு அதனால் எந்தத் தனிமதிப்பும் வந்துவிடவில்லை என்பதினை நெஞ்சில் நிறுத்துங்கள். அவரும் இவரும் காட்டிய மதிப்பினை நீங்களே தமிழ்நிலத்தில் வியந்தெழுதி,நீங்களே கீழே இறங்கித் தாழ்வது எப்படியோ உள்ளது.

நீங்கள் 'நான்' என்பதற்கு அப்பால், 'நாம்' எனும் வட்டத்துள்ளிருந்து நோக்கியல் செலவை மேற்கொள்வீர்களெனில் மட்டுமே மீண்டும் உயர்ந்திலங்குவீர்கள். நீங்கள் 'நாம்' என இயங்கும்போதுதான் உங்களின் 'நான்' மதிப்பாண்மை எய்தும். உலகில் பெரும்புகழ் மாந்தர் எவரும் 'நான்' எனும் ஊன்றுகோலை ஊன்றி நடந்ததில்லை. 'நாம்' என விரைந்தனர். வரலாறு அவர்களுக்கு ஊடாகவே கடந்து சென்றது. 'நான்' எனப்பேசி நலிவு வரலாறு படைத்த நாராயணசாமியாவது வருத்தமூட்டுவது. 'நாம்' எனப்பேசிய மார்க்சும், இலெனினும், மாவோவும், கெவாராவும்தாம் வரலாறு படைத்தனர். இவை நீங்கள் அறியாதனவல்ல.

— இரணியன், கோவை-18.

25-13 : கோவை துரைசாமி அவர்களைப் போலவே, எம் அருமைக் கொள்கை மாணவர் பாவலர் திரு. முல்லைவாணன் அவர்கள் 1976-77-ஆம் ஆண்டு வாக்கில், ஒருகால் எமக்கு, சிங்கையில் நம் தமிழீடு பாட்டை நன்கு உணர்ந்திருந்த மிகு செல்வரும் வள்ளண்மையும் உடைய ஒருவர், நாம் தமிழ் வளர்ச்சியில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்று விரும்பியும், எனவே தமிழ்த் தொடர்பான பணிகளில் மட்டுமே ஈடுபட வேண்டும் என்று கேட்டும், நாட்டுப் பிரிவினைக் கொள்கையைக் கைவிட வேண்டியும் விழைவு தெரிவித்ததாகவும், அவர் விழைவை ஏற்றுக் கொள்ளின், நமக்கு சென்னையில் சிறந்த ஒரு வீடும், சிறந்த ஓர் அச்சகமும் அமைத்துத் தருவதாகவும் கூறியதாக எமக்கு ஒரு மடல் எழுதி, எம் கருத்தென்னவென்று கேட்டபொழுது, **'அவர் பணத்திற்கு என்றுமே செலவு வைக்க மாட்டோம்'** என்று பெருமிதத்தோடு விடை எழுதினோம்.

25-14 : பின்னொருகால், அவர், வேறோர் அன்பர், முகவைப் பகுதியில் உள்ளார், அவர் வீட்டை எமக்கு எழுதி வைப்பதாகக் கூறி எம் இசைவைக் கேட்டபொழுதும், எமக்கு அது தேவையில்லை என்றும், தேவையானால், சென்னையிலேயே புறநகர்ப் பகுதியில் எமக்கொரு குடிசையே போதுமென்றும், அதை நாமே காலத்தால், அமைத்துக் கொள்ள இயலும் என்றும் எழுதினோம்.

25-15 : இனி, இறுதியாக ஓரிரண்டு நிகழ்ச்சிகளை மட்டும், யாம் பணத்திற்காக என்றுமே விழைவு காட்டியதில்லை என்பதற்கு எடுத்துக் காட்டுகளாகக் குறிப்பிட விரும்புகின்றோம்.

ஒருமுறை, **கண்டராதித்தம் சிற்றூரைச் சார்ந்த நெடுநாளைய தென்மொழி அன்பரும், எம் தலைமையில் திருமணம் செய்துகொண்ட ஏந்தலும் ஆன எழில் அன்பன் என்னும் ஒருவர், தம் கழனியில் விளைந்த கரும்பு விளைவில் காய்ச்சிய சருக்கரையில். அரை மூட்டையை அரும்பாடுபட்டுத் தம் ஊரிலிருந்து எடுத்துவந்து, திருச்சியில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட எம்மிடம் அன்பளிப்பாக அதனை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்; நாம் அதை ஏற்க அறவே மறுக்க, அவர் முகம் வாடி வருந்தியது. அக்கால் அவர் அன்பைப் பாராட்டி, அதற்காக அச் சருக்கரையில் ஒரு பிடி எடுத்து வாயிலிட்டு மகிழ்ந்து, நன்றிகூறி, அவர் கொண்டு வந்த மூட்டையை அவரையே எடுத்துக் கொண்டு போகக் கேட்டுக் கொண்டதும்;**

கடலூரில் தென்மொழி இருந்த பொழுது, எம்மேல் அன்பும் பரிவும் கொண்ட நிலக்கிழார் ஒருவர், எம் அருமை நண்பர் திருக்குறள் பெருமாள் வழி, எம் குடும்பப் பயன்படுத்தத்திற்கு 100 தேங்காய்கள் கொண்ட ஒரு மூட்டையை அனுப்பிவைக்க இசைவு கேட்டதும், யாம் அதை மறுத்ததும், அதன் பின்னர் அவரே, வேறொருகால், அந்த எம் அன்பர் வழியே, ஒரு மூட்டை நெல்லை அனுப்பக் கேட்டனுப்பவும், அதற்கும் யாம் ஒப்புதல் தர மறுத்ததும்; எம் பொருளாசையின்மைக்குப்பொருந்திய எடுத்துக்காட்டுகளாவன. இந்நிகழ்ச்சிகளை அக்கால் எம்முடனிருந்த ஓரிவரைத்தவிர பிறர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

ஈங்குக் கூறப்பெற்ற அனைத்து நிகழ்ச்சிகளும் எதற்காகக் கூறப் பெறுவதெனில், யாம் எந்த நிலையிலும், எவ்வளவு வறுமையிலும், எவர் இரங்கிக் கொடுத்த பொழுதும், எம் நலத்திற்கென எந்தப் பொருளையும் ஏற்றுக் கொள்ள இசையாமலிருக்க, இக்கால் ஒரு சிலர், தம் அறியாமையால், நாம் **தென்மொழி, தமிழ்ச்சிட்டு தமிழ்நிலம்** என்னும் மூவிதழ்களையும், எம் உறைத்த கொள்கை நோக்கிப் பல்வாறான இடர்ப்பாடுகளுக்கும் இழப்புகளுக்கும் இடையில் அரும்பாடுபட்டு நடத்திக் கொண்டிருக்க, நாம் அமெரிக்காவிலிருந்து சி.ஐ.ஏ. முகவராகப் பெரும் பணம் பெற்றே அவற்றை நடத்திக் கொண்டிருப்பதாகவும், வேறு சிலர், யாம் ஆர்.எசு.எசு. என்னும் இந்துமத வெறிக் கும்பலுடன் மறைமுகத் தொடர்பு கொண்டு, அவர்கள் தரும் பணத்தைக் கொண்டு நடத்திக் கொண்டு வருவதாகவும், இன்னும் சிலர், யாம் கொள்கை அளவில் ஆதரித்துப் போற்றி, எம்மையும் எம் கழக அன்பர்களையும் துணையாக்கிக் கொண்டு, தமிழீழக் கொள்கைக்காகப் போராடி வரும் தமிழீழப் போராளி திரு. **முகுந்தன்** என்னும் **உமா மகேசுவரன்** அவர்களிடமிருந்து, பெருந்தொகை பெற்றுக் கொண்டே அவரை ஆதரிப்பதாகவும்; இன்னும் புலனறிவில்லாப் புறங் கூறிகள் சிலர், தமிழீழ விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு. **அமிர்தலிங்கத்திடமிருந்தே** நாம் பணம் பெற்று வருவதாகவும், பிறவாறும் கூறுவனவெல்லாம் எத்துணை எள்ளி நகைக்கத்தக்கனவாம் என்பதைப் பளிச்சென்று எடுத்துக்காட்டுவதற்கே என்க. அதுவன்றி நம் பெருமைகளைப் பட்டியலிட்டுக் காட்டிப் பீற்றிக்கொள்வதற்காகவன்று என்று அறிவினர் உணர்ந்து கொள்க.

25-16 : இனி, நாம் எவ்வகைப் பதவி நசையும் கொண்டு இயங்கியதில்லை, எவரையும் நாடிப் போனதில்லை என்பதற்கும் ஓரிரண்டு எடுத்துக் காட்டுகளைக் காட்டுதல் இவ்விடத்து மிகுதேவையான ஒரு கட்டாயமாகும்.

ஒருமுறை **1960-61** என்று நினைக்கின்றோம். (சரியான குறிப்புகள் எம் கோப்புகளில் உள்ளன. அவற்றைத் தேடி நாள் முதலியனவும் பெயர்களையும் இட்டு எழுதுதற்கு இக்கால் எமக்கு ஒய்வும் இல்லை; தேவையுமில்லை. தேவைப்படுங்கால் அவற்றை வெளியிடுவோம்.) சென்னையில் திரு. **விஷ்ணுராம்மேதி** அவர்கள் ஆளுநராக விருந்த காலம். அவர் தம் கிண்டி, அரசவளமனையில் அமைத்த விருந்தொன்றில் நாமும் ஒரு சட்டமன்ற உறுப்பினர் வழிக் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. அக்கால் திரு. **காமராசர்** முதலமைச்சர். அந்த விருந்தில் திரு. காமராசரைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பும் கிடைத்தது. நம்மைத் தக்க முறையில் அச் சட்ட மன்ற உறுப்பினர் அவரிடம் அறிமுகம் செய்து வைத்தார். அப்பொழுது நம் பாடல் திறனும், எழுத்தாற்றலும் அவருக்கு நன்கு ஆற்றுப் படுத்தி வைக்கப் பெற்றன. அவற்றைக் கூர்மையாகக் கேட்டுணர்ந்த அவர், எம்மைத் தம் கட்சியில் சேர்ந்து பணியாற்றுமாறும், தேவையானால் மிகு வலிமை பெற்ற ஓர் அச்சகமும் வீடும் தருவதாகவும் அவற்றை வைத்துக் கொண்டு, கட்சிக்கென் ஓர் இதழை நடத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். காமராசர் போலும் பெருந்தலைவர்களின் கட்சித் திண்ணையில் இடம் கிடைப்பதே பெரும் பேறு எனக் கருதியிருப்பார்கள் அரசியலில் உலர் வந்த காலம் அது. ஆனால், அவரிடம் நாம் கூறியது, 'தமிழுக்கே எம் முழு வாழ்க்கையையும் செலவிட நாம் உறுதி பூண்டிருக்கிறோம். வேறெதிலுமோ, எக்கொள்கை அரசியலிலோ நாம் நாட்டங்கொள்ள இயலாது. எம்மை மன்னியுங்கள்' என்பதே. (தொடரும்)

உண்மைத் தொண்டர்கள் உடனே செயல்படுக!

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம்!

12-5-85-இல் ஈரோட்டில் நடைபெறவிருக்கிறது!

கடந்த 4-3-85-ஆம் நாள், ஈரோட்டில் ஆயிர வைசியர் திருமண மண்டபத்தில், பகல் 12-30 மணியளவில் தலைமைக்கழகச் செயற்குழுக் கூட்டம் கூடி, இன்றைய அரசியல் சூழல்களையும், அடுத்துக் கழகம் செயல்படவேண்டிய முறைகளையும் செவ்விதின் ஆராய்ந்தது. கூட்டத்திற்குக் கழக முதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில், துணைப் பொதுச்செயலர் தென்னவன்கோ, அமைப்புச்செயலர் தென்மொழி ப. துரையரசன், முதன்மைக்குழு உறுப்பினர் தென்மொழி ந. முத்துக்குமரன், பெரியார் மாவட்ட அமைப்பாளர் பாவேந்தர் இராமலிங்கம், கோவை மாவட்டப் பொருளர் பல்லடம் மா. ஆறுமுகம், ஈரோடு நகரச் செயலர் எழிலரசன், வடசென்னை மாவட்டப் பொருளர் துரை, தென்னவன், திருப்பூர் வட்டத் தலைவர் க. தமிழப்பன் ஆகியோரும் பார்வையாளராக ஈரோடு அரசகுமாரன், பல்லடம் சீனி. செந்தேவன், சென்னை இளஞ்சித்திரன், திருவாட்டிகள்: தாமரை-பெருஞ்சித்திரனார், சேநுகா-முத்துக்குமரன், இறைவி-துரையரசன், சுலோசனா-ஆறுமுகம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கழக ஆய்வாளர்கள் கூடிப்பேசி, கழக அமைப்புகளை மேலும் விரிவுபடுத்தவும், கழகச் செயற்பாடுகளை வலிவுபடுத்தவும், அடுத்துவரும் காலங்களில், கழகம் எந்தெந்தப் போராட்டங்களை, எவ்வெவ் வகைகளில் எடுத்துச் செல்வது என்பது பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் ஆய்ந்து முடிவு செய்யவும், அடுத்துவரும் 12-5-85-ஆம் நாள், காலை 9 மணியளவில், ஈரோட்டில், மாநிலச் செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டுவது என்ற தீர்மானத்தை முழு மனத்துடன் நிறைவேற்றியது. அக்குழு அத் தீர்மானத்தின் அடிப்படையில் செய்த முடிவுகள் பின்வருமாறு:

1) தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்ட முடிவான, 12-5-85-இல் நடைபெறும், மாநிலச் செயற்குழுக் கூட்டத்திற்கு வருகைதரும், கழக மாவட்ட, வட்ட அமைப்பாளர்களையும், பேராளர்களையும் பெரியார் மாவட்ட அமைப்பு வரவேற்கும் என்றும், அவர்களுக்கான ஒரு நாள் உணவையும், செயற்குழுக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கான செலவையும் பெரியார் மாவட்டக்கழகமே ஏற்கும் என்றும் முடிவு செய்யப்பெற்றது.

(இடம் பின்னர் தெரிவிக்கப்பெறும்.)

2) 12-5-85 அன்று முற்பகலில் கூடும் பொதுக்குழு (கழக மாநில, மாவட்ட, வட்ட அமைப்பாளர்கள், அழைக்கப்பட்ட பேராளர்கள், ஆர்வலர்கள் முதலியோர்) உருவாக்கும் தீர்மானங்களைப் பிற்பகலில் செயற்குழு (கழக மாநில அமைப்பாளர்கள், செயற்குழு, முதன்மைக் குழு உறுப்பினர்கள்) ஆய்வு செய்து, செயற்பாடுகளுக்கான முடிவுகளை வடிவு செய்யும்.

3) மாநிலச் செயற்குழுக் கூட்டத்திற்கு இதுவரை அமைக்கப்பட்ட மாவட்ட, வட்டப் பொறுப்பாளர்கள் யாவரும் கண்டிப்பாக வருகை தருதல் வேண்டும்.

4) ஒவ்வோர் அமைப்பாளரும் தம்முடன் இரண்டிரண்டு ஆர்வலர்களை அழைத்து வரலாம்.

5) மாநிலச் செயற்குழுக் கூட்டத்தை ஏற்று நடத்துவதற்கான, கீழ்க்காணும் தற்காலிக செயற்குழு ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது.

1. பாவேந்தர் இராமலிங்கம், (பெரியார் மாவட்ட அமைப்பாளர்) —தலைவர்.
2. வ. காளிமுத்து (ஈரோடு நகரத் தலைவர்) —செயலர்.
3. எழிலரசன் (ஈரோடு நகரச் செயலர்) — இணைச்செயலர்.
4. அறிவுடைநம்பி, (குமாரசாமி) — பொருளர்.
5. செயற்குழு உறுப்பினர்கள்: அரசகுமரன், அரசு, தென்மொழி நா. இளமாறன்.

[பிற விளக்கம் பின்னர் வரும்]

நடுவணரசின் பொதுப் பள்ளிகள்!

— மா. செ. தமிழ்மணி —

புதிதாக அமைந்துள்ள நடுவண் அரசு ஏதோ பல ஆக்கமான பணிகளைச் செய்யப் போவதாகக் காட்டிக்கொள்ள, சில குழுக்கள், அமைத்தல், செயலர் கூட்டம் கூட்டுதல் போன்றவற்றைச் செய்து வருகின்றது. இச் செயல்கள் மாநில அரசுகளை அடிமையாக்கி இத் துணைக் கண்டத்தை வல்லாண்மை நாடாக்கும் முயற்சி என்பதைக் கூர்ந்து கவனிப்போர் அறியலாம். இதற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைவது மாநிலங்களில் பொதுப் பள்ளிகளை அஃதாவது நடுவணரசு ஆளுமையின் பள்ளிகளை மிகுதியான எண்ணிக்கையில் தொடங்கப்போவதாக அறிவித்துள்ள அறிவிப்பே ஆகும்.

கல்வித் துறையை மாநில அரசுகளின் பட்டியலில் இருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றியதன் வழி, மாநில மக்கள் தம்மை யறியாது தாமே இந்தி, இந்திய வல்லாண்மைக்கு அடிமையாகும் ஒரு சூழ்ச்சியைச் செய்ய நடுவணரசு எண்ணுகிறது. இஃது இப்படியாக, பொதுப் பள்ளிகளைத் தொடங்குவதால் மாநிலத்தின் மக்கள் தம் தனித் தன்மைகளைத் துறந்த அடிமை வாழ்விற்கு அணியமாதல் அன்றி வேறு இல்லை. பொதுப்பள்ளிகளில் பாடங்கள் பொதுமொழி வழியாகத்தான் கற்பிக்கப் பெறுமாம். ஆக, இந்தி என்ற வேண்டாத சுமை பல தேசிய இனமக்களின் தலைமேல் சுமத்தப்பட இருக்கின்றது.

பல நிலைகளில் தன் நச்சாற்றலை நுழைத்து நலிவுறுத்தும் இந்தி கல்வி நிலையிலும் தன் ஆளுமையை மிகுதிப்படுத்த உள்ளது. ஆக, இந்தி அனைத்து வலிவான நிலைகளிலும் வந்து அமர்ந்து கொண்டு விட்டது எனலாம்.

தமிழ்நிலத்தைப் பொறுத்தவரை, கல்வி வளர்ச்சி – அறிவு மலர்ச்சி என்பதெல்லாம் பொது நிலை மக்களில் உழைக்கும் நிலையில் உள்ளோர்க்குக் கிட்டாத ஒன்றாக ஆகிவிட்டது என்றே கூறலாம்.

ஊர்தோறும் உள்ள தொடக்கக் கல்வி என்பது உணவுத் தட்டில் உழல்கின்றது. கல்வித்துறையின் அனைத்து அதிகாரிகளும் 'ஊட்ட உணவு' வழங்கல் மேற்பார்வையாளர் என்றால் அது மிகையானதன்று.

கல்வி வளர்ச்சி குறித்து ஒரு திட்டந்தானும் அவர்களால் மேற்கொள்ளப் பெறுதல் இல்லை. இந்நிலையில் தாமே விரும்பிப் படிக்கும் குழந்தைகளும், படித்தால் உழைக்காமல் ஊதியம் பெறலாம் எனும் குடும்பத்து மேல் பிரிவுக் குடும்பத்துப்பிள்ளைகளும்தாம் படிக்கின்றனர். மற்றவர் — உழைப்போர் குழந்தைகள் சோற்றுத் தட்டுடன் நின்று விடுகின்றனர்.

இப்படித் தொடக்கக் கல்வியில் இருந்து மேனிலைக் கல்வி, கல்லூரிக்கல்வி வரை வருகின்றவர் பெரும்பாலும் ஏந்தான ஒரு பகுதி உழைப்பு மட்டும் கொண்டுள்ள இடைத்தட்டு மக்களின் பிள்ளைகளில் சிலரும், முழுமையாகவே உழைக்காது ஊதியம் பெறும் மேல்தட்டுக் குடும்பப் பிள்ளைகளுமே ஆவர். ஆக கல்வி என்பது இன்றும்கூட எளியோர்க்கு உரியதாக இல்லை.

இந் நிலையில் பொதுப்பள்ளிகளில் பொதுமொழி வழி படிப்போர், அண்மைக்காலம் வரை உடல் உழைப்பைக் கனவிலும் கருதாத ஒரு பிரிவினரின் பிள்ளைகளாகவே இருப்பர். அவர்களே வல்லாண்மை அரசின் செயல்களில் ஆளுமை பெறுவோராக இருப்பார்!

ஆக, என்றும்போல் உழைக்கும் பிரிவின் குடும்பப்பிள்ளைகள் அடிமையாகவும், அவர்களை ஆண்டுவந்த குடும்பங்களின் பிள்ளைகளே ஆளுவோராகவும் இருக்கப் போகின்றனர்.

மேலும், பொதுப்பள்ளிகள் தொடங்குதல் என்ற நிலையில் அடிமை உணர்வான மக்கள் தம் தனித் தன்மை அழிக்கப் பெறுகிறதே என்பதையும் அறியாமல், தாமும் அதில் சேர்ந்து ஊதியம் பெற்றுப் பிழைப்பு நடத்தலாம் என்ற நிலைக்கு ஆளாகிவிடுவர்.

இந்நிலைகள், தமிழக மக்களை மேலும் அடிமையாக்கி வைக்கும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

ஆக, நடுவணரசின் விலங்குத்தனமான வலிமை' துணைக் கண்டத்து அனைத்துத் தேசிய இனங்களின் உரிமைகளை ஒடுக்கி நசுக்க இருக்கின்றது என்பதை உணர்ந்து செயல்படுதல் வேண்டும்.

மக்கள் உரிமைக் கழகம், தமிழ்நாடு.

கண்டன அறிக்கை!

ஆர்க்காடு, இராணிப்பேட்டை மக்கள் கலாச்சாரக் கழகம் மற்றும் மக்கள் உரிமைக் கழகத் தோழர்கள் மீது தொடர்ந்து காவல்துறையும், வன்முறையாளர்களும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

பொதுவான மக்கள் நாயக உரிமைகளைக் கூட மேற்படி கழகங்களுக்கு அதிகாரிகள் மறுத்துவரும் நயமின்மையையும், மேடை போட்டுப் பேசவும், பாடவும்கூட மறுத்த குடியரசு வேடிக்கைகளை, 'இந்தியா டுடே' தாளிகை தனது 1984 அக்டோபர் 31 இதழில் படம் பிடித்து காட்டியிருந்தது.

தமிழக ஆளுநருக்கு ம.உ.க. தலைவர் 19-12-84-ஆம் பக்கல் கடிதத்தில் மேற்படி கழகங்களின் தோழர்கள் மீது 3-12-84-இல் நடந்த கொடிய தாக்குதல்களை உசாவி. தொடர்பான குமுகாயப் பகைவர்கள் மீதும் காவல் துறையினர் ஒழுங்கினை நிலை நிறுத்துமாறு வேண்டுகோள் விட்டதும் செவிடர் காதில் ஊதிய சங்கானது.

மீண்டும் 5-2-85-ஆம் பக்கல் மாலை ஏறத்தாழ 20க்கும் மேற்பட்ட குமுகாயப் பகைவர்கள் ஆர்க்காட்டில் ம.க.க. தோழர் வீட்டில் புகுந்து பொருட்சேதம் செய்தனர். கொடிய காயங்கள் உண்டாக்கினர். எழுதவே இயலாத இழிவான சொற்களால் பெண்களையும் பேசிக் கொடிய அச்சுறுத்தலுக்கும், தாக்குதலுக்கும் காத்திருக்குமாறு எச்சரித்துச் சென்று விட்டனர்.

சொல்லி வைத்தாற்போல் நிகழ்ச்சி இடத்திற்கு வந்த காவல்துறை உதவி ஆய்வாளர் போர்க்களக் காட்சியாகச் சேதமடைந்திருந்த பொருட்களையும் காலக (சோடா) புட்டிகள் துண்டுகளையும் பார்வையிட்டார். அரத்தக் காயத்துடன் துடித்துக் கொண்டிருந்த தோழர்களையும் பார்த்தார். ஆனால் பாதுகாப்பு அளிக்க வேண்டிய காவல் அதிகாரி அங்கிருந்த செருப்புகளை எண்ணி விட்டுப் பெண்களைப் பார்த்து வெறித்தனமாகவும், இழிவாகவும் எழுத இயலாத அளவுக்குப் 'பண்பாட்டு'டன் பேசினார். உடனே வீட்டைக் காலி செய்துவிட்டு வேறு ஊர் போகச் சொன்னார். இங்கேயே இருந்தால் பரத்தமை (பிராத்தல்) வழக்குப் போட்டு அவமானப்படுத்துவேன் என ஆர்ப்பரித்தார். அரசு வேலை செய்யும் பெண்களைப் பணிவிடுப்புச் செய்து விட்டுப் போகுமாறு உத்தரவிட்டார். அத்துடன் நில்லாமல் மீண்டும் மீண்டும் தாக்குதல் வரும், பொய் வழக்குகள் வரும் என மிரட்டினார்.

காயத்துடன் காவல் நிலையம் சென்றவர்களை அரசு மருத்துவமனைக்கு அனுப்பாமல் மிரட்டி, யாருக்கும் வேண்டுகோள் செய்யவோ அரசு மருத்துவமனையில் சான்று பெறவோ கூடாதென அடிபட்ட தோழரின் ஒன்றுமறியா அப்பாவை மிரட்டி (வேறு பல கட்டுப்பாடுகளுக்குள்ளாக்கி) அனுப்பி உள்ளனர்.

அரசு அதிகாரிகளும் காவல் துறையினரும் கண்காணிப்புடன் நடத்தும் இத்தகைய கொடிய அடக்குமுறைகளும், அட்டூழியங்களும், மக்கள் பகைப்போக்குகளையும் ம.க.க. தோழர்கள் மக்கள் முன் வெளிப்படுத்துகின்றனர். சீரழிந்த குமுகாயத்தையும் அதன் பண்பாட்டுச் சீரழிவையும் அதனைக் கட்டிக் காக்கும் அரசு அமைப்பையும், அரசியல்காரர்களையும் முகமூடி கிழித்துக் காட்டுகின்றனர் எனும் 'குற்றத்தைத்' தவிர வேறு எந்தக் குற்றத்தையும்' ம.உ.க. மற்றும் ம.க.க. தோழர்கள் செய்யவில்லை.

ஆகவே மேற்படி கழகங்களின் பேரில் கொடுக்கப்பட்டுள்ள அடக்குமுறைச் செயல்களை அனைத்து தேச 'பக்தர்'களும் மக்கள் நாயக இயக்கங்களைச் சார்ந்தவர்களும் நாட்டின் நல்ல எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டவர்களும், கண்டிக்குமாறு வேண்டுகிறேன்.

இவண்,

—பி. வி. பக்தவத்சலம், க.மு; ச. இ.,
தலைவர், மக்கள் உரிமைக் கழகம், சென்னை.

அன்பர்கள் கவனிக்க ...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5 மணிக்கு மேல் முன் இசைவு பெற்று வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- அமைச்சர்.

தமிழின விடுதலைக்குப் போராடுவோம்!

ஓர் உணர்வு மடல்!

தமிழக முதல்வர் தமிழினப் பற்றுள்ளவரா?

தமிழின ஒற்றுமை நாடும்,
செ தமிழ நிலவன், வைராகுடி.

பேரன்புமிக்க ஐயா !

வணக்கம். தமிழீழத்தில் ஒவ்வொரு நாளும் நடந்துவரும் காட்டுவிலங்காண்டித்தனம் கட்டுமீறிச் சென்றுகொண்டு இருக்கிறது. ஒவ்வொரு நாளும், நிமையமும்தமிழீழ நிகழ்வுகளைஉற்று கவனிக்கிறேன். அதே சமயம் தமிழகத்தில் நடந்த தேர்தலினல் தமிழீழ விடுதலைக் காலம் நீட்டிக்கப்படுகிறது. முதன் முதலில் நம்மை எதிர்நோக்கி இருக்கும் சிக்கல் (பிரச்சனை) தமிழீழச் சிக்கலே. தமிழீழம் விடுவிக்கப் பட்ட பின்புதான் எல்லாமே. அங்கே அவன் மீட்பை இழந்தால் நாமும் இங்கே விடுதலையை இழந்தததாகப் பொருள்

தமிழீழம் கிடைத்து இறையாண்மை பெற்று உ. ஒ. பேரவையில் ஒரு பேராளி ஆன பின்பு, நாம் வெகு விரைவில் தமிழ்நாட்டு மீட்பை அடையலாம் என்பது என் உறுதியான-தெளிவான கருத்து. தமிழீழத்தவரின் துணையுடன்அவர்களின் போர்ப்பயிற்சியுடன் அடைக்கலத்துடன் நாமும் இங்கே விடுதலை பெற்றுவிடலாம்.

இங்கே பதவி ஏற்ற அமைச்சரைப்பற்றி சிங்களன் எந்த அளவிற்குத் தெரிந்து வைத்திருக்கிறன் என்பதைப் பற்றிப் பார்ப்போம் : செயவர்த்தனனின் கருத்து : (1-3-85 துக்ளக்கில் வெளிவந்த நேருரை. ...அவர்கள் (அ. தி. மு. க. ஆட்சியாளர்கள்) பிரிவினையை ஆதரிப்பவர்களாக இல்லாவிட்டாலும், சிறிலங்காவில் உள்ளபிரிவினையாளர்களுக்கு ஆதரவு தரவேண்டிய 'நிலையில' அவர்கள் (அதிமுக ஆட்சியாளர்கள், ம.கோ.இரா.) இருந்தார்கள்... மேலும் செயவர்த்தனன் நேருரையில் சொல்கிறன் பாருங்கள்...கருணநிதியின் கோஷ்ட்டி முழுமையாக தோற்கடிக்கப்பட்டு விட்டது. வாக்காளர்கள் வன்முறையாளர்களைப் விடுதலைப் படைகள்) பற்றியோ சிறிலங்காவைப் பற்றியோ, ஈழத்தைப்பற்றியோ கவலைப்பட்டுக் கொள்ளவில்லை.

இங்கே இருக்கும் சொரணையற்ற சதைப் பிண்டங்களை (தமிழர்களைப் ப்பற்றி அவன் இவ்வளவு தொலைவுவரையும், ம. கோ. இரா. பற்றித்தெரிந்து வைத்துப் போராட்டத்தை ஒடுக்குகிறன்.

மேலும் முதல்வர் ம. கோ. இரா- - வைப்பற்றி சில உண்மைகளை நான் அறிந்து வருகிறேன். அண்மையில் சென்ற மாதம் அவர் பதவி ஏற்றபின் இலங்கையில் சிங்களன்கள் புலவு (பிரியாணி) வைத்து உணவருந்திக் களிப்பில் திளைத்திருக்கிறன்கள். (இது ஈழத் தமிழர்கள் அங்கிருந்து இங்கு விடுத்த செய்தி. இது. ம. கோ இரா இனமானமற்றவர். கண்டியில் பிறந்தவர் என்பதை நமக்குக் காட்டுகிறது'

'தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின் தலைவனய்' வரவேண்டும் என்ற பாவேந்தரின் இலக்கணத்திற்கு இவர் முற்றிலும் முரணக நிற்கிறர். மேலும்,

1977 ஆம் ஆண்டு அமெரிக்கா சென்றிருந்த சமயம், அவரிடம் அமெரிக்கச் செய்தியாளர்கள், ''இலங்கையில் தமிழினம் படுகொலை செய்யப்படுகிறதே அதைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டதற்கு அவர், ''எனக்கும் சிங்களச் சுவைஞர்கள் (இரசிகர்கள் நிறைய உண்டு. இதைப்பற்றி ஒன்றும் சொல்லமுடியாது'' என்று விடையளித்திருக்கிறர்.

மேலும். இ'து அவர் ஒரு தமிழர் அல்லர் என்பதைக் காட்டுகிறது இலங்கையில் 1983, சூலை 27-இல் படுகொலை நடந்தது. இந்தியாவில் அனைத்து மாநில அவைகளும் கண்டனத் தீர்மானம் உடனே நிறைவேற்றின. ஆனல் இராமச்சந்திரனே தமிழகத்தில் செப்டம்பர் மாதம்தான் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி, ஒருநாள் கடையடைப்பும் செய்திருக்கிறர்.

தமிழின ஐயா, பாருங்கள் தமிழின தேசிய ஒருமைப்பாட்டை, ஒற்றுமையைச் சிதறடிக்கிறர். நான் கேரளம் சென்றிருந்தபோது, மலையாளமாணவர்பலரிடம் அவரைப்பற்றிக் கேட்டேன். அவர்கள், அவர் ஓர் உண்மையான மலையாளி என்று சொன்னதுடன், சில இடங்களில் ''எங்கள் மலையாள அண்ணனே, வருக வருக'' என்ற பதாகையும் தொங்க விட்டிருந்தனர். அடையாளம் கண்டுகொள்ளுங்கள்.

இதை ஏன் நான் சொல்கிறேன் என்றல், இராமச்சந்திரனை விட பல நூறு மடங்கு கலைஞர் இனமானம் உடையவர். அவர் மேல் ஒருசில காழ்ப்புகள் இருந்தாலும் அவற்றை நாம் மறந்து, தமிழ் இன நலத்தை நாடுபவர்களிடம் நம் உறவை வைத்துக் கொள்ளவேண்டும். இலங்கையில் விடுதலைப் போராளியை ஒடுக்க சிங்கள மக்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றுகிறர்கள். அப்படியானல் நாம் ஏன் ஒன்றுகித் தமிழினத்தை மீட்கச் செய்யக்கூடாது ? கண்டிப்பாக ஒன்றுபட்டு ஈழத் தமிழனுக்குக் குரல் கொடுப்போம்.

இறுதியாக, நாம் திராவிடர் கழகத்தினர், திராவிட முன்னேற்றக் கழகத்தினர், நம் கழகத்தினர், அனைவரும் ஒன்றகச் சேர்ந்து செயல்படவேண்டும். ஒருவரை ஒருவர் குறை கூறிச் சாடக்கூடாது. எல்லாம் மக்கள் நலம் கருதியே. நீங்கள் இனிமேல் கழகஉடன்பிறப்புகளையோ, தலைவர்களையோகுற்றம் காணதீர்கள் என்று மிக மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். என் வாழ்நாள் அனைத்தும் தமிழின ஒற்றுமைக்காக, பின்பு இன, மொழி, நாட்டு மீட்புக்காகப்பாடுபடுவோம். தக்கசமயத்தில் ஈகம் செய்வோம் என்று கூறி முடிக்கிறேன்

வெல்க தமிழினம் ! தமிழின ஒற்றுமை ஓங்குக ! வீழ்க காடையர் அரசு.

தமிழின முன்னேற்றமும், சிந்தனைத் திசை திருப்புதல்களும்!

கரடிப்பட்டி: க. கண்ணன்.

முகவுரை :

இவ் வுலகிலுள்ள மக்கள் யாவரும் காலத்தாலும், இடத்தாலும், நிறத்தாலும் வெவ்வேறு பிரிவினராக இருநதாலும், ஒரு மூல மாந்த உருவத்திலிருந்து கிளைத்துப் பல்கிப் பெருகியவர்களேயாவர். அறிவியல் முன்னேற்றங்களால் உலகம் சுருங்கிக் கொண்டு வருகிறது. அஃதாவது. சாதி,மத, இன வேறுபாடுகள் காலப்போக்கில் மறைந்து விடும் என்று பேசினலும், தன்னும் மாந்த இனம் தனி மாந்தனகவும், குடும்பமாகவும், குழுக்களாகவும் இனங்களாகவுமே இருக்கின்றது; இருக்கப்போகின்றது.

ஒருவன் உலக மக்கள் அனைவரும் போற்றும் சிந்தனையாளனக இருக்கலாம், ஆனல் செயலாளனக இருக்கமுடியாது. ஏனெனில், ஒருவனுடைய சிந்தனைய நடைமுறைக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட மக்களிடத்தில் மட்டுமே ஒருவனல் செயற்படுத்த முடியும். இதற்கு எடுத்துக்காட்டாகக் காரல்மார்க்சையும் இலெனினையும் கூறலாம். அனைத்துலக மக்களின் நல்வாழ்விற்கான பொதுவுடைமைச் சிந்தனையைக் காரல்மார்க்சு 'மூல முதல்' (Capital) என்ற நூலில் எழுதினர். ஆனல், அச்சிந்தனையைச் செயற்படுத்தும் போது இலெனின் தாம் வாழ்ந்த மக்கள் கூட்டத்திடம் மட்டுமே செயல்படுத்த முடிந்தது. உலகம் முழுமைக்கும் ஒரே நேரத்தில் பொதுவுடைமை அமைப்பை நிலைநாட்ட முடியவில்லை. இந்தியாவைப் போல் பல மொழிகளைப் பேசுகின்ற பல்வேறு தேசிய இனங்கள் சோவியத்து நாட்டில் இருந்தாலும் அந்தந்தத் தேசிய இனங்களின் தனி நாட்டு உரிமையை முன்வைத்துத்தான் பொது எதிரியை அவரால் வீழ்த்த முடிந்தது. அதைவிடச் சிக்கலானதும், மாறுபட்டதுமான ஒரு குமுகாய அமைப்பு இந்தியாவில் இருப்பதை வரலாற்று அறிவு மிக்கவர்களே தெளிவாக அறிந்துகொள்ள முடியும். ஆகவே, இலவுகாத்த கிளியைப்போல் வீணே நம் காலத்தையும், உழைப்பையும் கழித்து, நம் இனத்தையும் அழிக்கும் முயற்சியில் இறங்காமல் தமிழின முன்னேற்றத்தில் நம்முடைய சித்தனையைச் செலுத்த வேண்டும். இன்று 'தமிழினம்', 'தமிழின முன்னேற்றம்' என்ற ஒரு கூட்டுச் சிந்தனையைத் தனி மாந்தன் ஒருவன் எண்ண முடியாமைக்கு என்ன கரணியம் அல்லது எந்தெந்த வழிகளில் இச் சிந்தனை திசை திருப்பப்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

I. தமிழின முன்னேற்றம் — ஒரு வரலாற்றுப் பார்வை :

தமிழின வரலாற்றை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குட்படுத்தி ஆராயின், மூவேந்தர்கள் காலத்தில் இருந்த சிறு சிறு குடி மரபினர் அல்லது சிற்றரசுகளைச் சேர்ந்தவர்களே இப்பொழுதுள்ள முக்குலத்தோர், முத்தரையர், கவுண்டர், வன்னியர் போன்ற 'சாதி'க் கூட்டத்தினர். தாம் தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணம் மூவேந்தர்கள், சிற்றரசர்கள் போன்றவர்களிடம் என்றுமே வலுவாக இருந்ததில்லை. திருவள்ளுவர் போன்ற சிந்தனையாளர்கள் சிலரிடமும் புலவர்களில் சிலரிடமும் மட்டுமே மொழி வழியில் இன நலச் சிந்தனைகள் இருந்திருக்கின்றன. அன்றிலிருந்து இன்று வரை இப்போக்கு ஒரே மாதிரியாகவே இருக்கின்றது. தமிழ்நாட்டின் முதலமைச்சர்களாக வந்த காமராசர் முதல், ம. கோ. இராமச்சந்திரன் வரையும், அவர்களிடம் இருந்த மற்ற அமைச்சர்களிடமும், தமிழின நலச் சிந்தனைகள் ஓரளவு கூடியோ அல்லது குறைந்தோ இருந்திருக்கலாமே ஒழிய, முழுமையான, உறுதியான, என்றும், தம் இனத்திற்குப் பயன்படக்கூடிய செயலை ஒருவரும் செய்யவுமில்லை; சிந்திக்கவுமில்லை. அன்றிருந்த ஒரு சில புலவர்களைப் போல்தான் நம் காலத்தில் பாவேந்தர், தந்தை பெரியார், மொழிஞாயிறு பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனர் போன்ற ஒரு சிலர் மட்டுமே தமிழின முன்னேற்றத்தில் உறுதியான பற்றுகொண்டு உழைத்திருக்கின்றனர், உழைக்கின்றனர்.

2. சாதி. மத வேறுபாடுகள் :

இன்று அதிகமாக சாதி, மதம் என்ற வேறுபாட்டினலேயே 'தமிழினம்', 'தமிழின முன்னேற்றம்' என்ற சிந்தனைகள் சிதறடிக்கப்படுகின்றன. இந்து மதம் என்ற போர்வையில் தொழிற் பிரிவினராக இருந்த தமிழர்களைப் பல சாதிகளாகவும், ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனித் தெய்வங்களையும், திருவிழாக்களையும் வைத்துக்கொண்டு பார்ப்பனர்களும், அந்தந்தச் சாதியிலுள்ள நிலவுடைமையரும், இனவுணர்வு பெறவிடாமல் செய்து கொண்டுள்ளனர். அண்மைக் காலமாகக் கோயில் வழிபாடுகளையும், மத விழாக்களையும் மிகப் பெரிய அளவில் நடத்திப் பெரியாரின் உழைப்பால் ஓரளவு ஏற்பட்டிருந்த இன உணர்வு திசை திருப்பப்பட்டுள்ளது.

இவ்வாறே, இசுலாம் மற்றும் கிறித்தவ மதத்தைச் சேர்ந்த தலைவர்களும், மக்களை மயக்கத்திலேயே வைத்து ஏமாற்றிப் பிழைப்பதற்காக, மத உணர்வை மட்டும் தூண்டிக்கொண்டுள்ளனர். இவர்கள் எல்லாம் அரபு நாடுகளிலிருந்தும், ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் வந்தவர்களைப்போல் எண்ணிக்கொண்டு ஒதுங்கியே வாழ்கின்றனர். இசுலாம் மற்றும் கிறித்தவ மதக் கொள்கைகளின்படி பல்வேறு பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தாலும், வீட்டிலிருந்து வெளியிடங்கள் வரை தமிழிலேயே உரையாடுவதாலும், கல்வி பயில்வதாலும், நாம் எல்லோரும் தமிழரே என்னும் உணர்வு பெருதிருப்பது மிகவும் வருந்தற்குரியது. இந்த வேறுபாட்டைப் பயன்படுத்தியே பார்ப்பனத் திருட்டுக்கூட்டம் இசுலாம் மற்றும் கிறித்தவ மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் மதக் கலவரங்களைத் தூண்டி விட்டுத் தம் இந்து மத மேலாண்மையை நிலை நிறுத்திக்கொண்டு வருகிறது. மொழி வழியில் நாம் எல்லோரும் தமிழரே என்னும் உணர்வோடு ஒன்றுபடவில்லை யாயின், மதப்பற்று மட்டும் மிக்க ஆரியப் பார்ப்பனர்களும், இசுலாம் மற்றும் கிறித்தவ மக்களும் எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் பாதுகாப்பாக வாழமுடியாத சூழ்நிலை உருவாகலாம். மேற் குறிப்பிட்ட மூன்று மதத்தினரும் (அஃதாவது மதத்தின் பெயரால் மக்களைப் பிரித்துச் சுரண்டிப் பிழைக்கும் தலைவர்கள் தமிழின உணர்வு பெறவிடாமல், சிந்தனையைத் திசை திருப்புவதில் பெரும் பங்கு ஆற்றி வருகின்றனர். சாதி, மதச் சாக்கடைக்குள்ளே இன்னும் எத்தனை ஆண்டுகள் தமிழினம் மூழ்கியிருக்கப் போகின்றது ?

3. அரசியல் வேறுபாட்டு உணர்வுகள் :

சாதி, மதப் பிரிவுகளைப் போலவே இன்று ஒவ்வொரு நாளும் புதியதாகத் தோன்றிக் கொண்டிருக்கும் போலியான அரசியல் கட்சிகளும் தமிழினத்தைப் பல்வேறு கூறுகளாகப் பிரித்துவிட்டன. பன்னூறு ஆண்டுகளாகச் சாதிப் போராட்டத்தில் ஒருவரோடு ஒருவர் பகைத்துக்கொண்டு போராடி அழிந்ததைப் போல் அரசியல் கட்சிகளும் புதிய பகையுணர்ச்சிகளை மக்களிடம் தோற்றுவித்து இன நல உணர்வு பெறவிடாமல் திசை திருப்புகின்றனர். பக்கத்து வீட்டுக்காரன் அல்லது அடுத்த சாதிக்காரன்தான் தன் வறுமைக்குக் கரணியம் என்று முறை காட்டப்பட்டதுபோல், அடுத்த கட்சிக்காரன்தான் தான் முன் முன்னேருமைக்குரிய கரணியம் என்று இன்றைய அரசியல்காரர்களால் காட்டப்படுகின்றன. உண்மை உணராத பொதுமக்கள் தங்கள் இனத்துக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டு மடிகின்றனர். நம்முடைய அரசியல் தலைவர்கள் எல்லாம் பொது எதிரியைக் காண்பிக்காமல் ஓரின உட்பகையை வளர்த்துக் கொண்டு தங்கள் அரசியல் பிழைப்பை நடத்துகின்றனர். தேர்தல் என்ற மயக்க உணர்ச்சியிலேயே தங்கள் வைக்கப்பட்டு, உழைப்பையும் பொருளையும் கட்சித் தலைவர்கள் உறிஞ்சுவதைப் பொது மக்கள் உணர முடிவதில்லை. தமிழ் நாட்டுற்குள் எத்தனையோ கட்சிகள் தோன்றிக் காலப்போக்கில் அழிந்தும் மாற்றப்பெற்றும் புதிய புதிய கட்சிகள் தோன்றி வந்தாலும் அவற்றால் தங்களுக்கு எந்தவகைப் பயனும் விளையவில்லை என்பதை ஓரளவு கல்வி அறிவு பெற்ற இளைய தலைமுறையினர் கூட சரியாக உணரவில்லை. 'கட்சிகள்', 'தேர்தல்கள்' என்ற மயக்கத்திலிருந்து மக்களை விடுவித்த லொழிய தமிழர்கள் இன உணர்வும் இனமுன்னேற்றமும் பற்றிச் சிந்திக்கவேமாட்டார்கள்.

(தொடரும்)

கட்சிக்கு அப்பாற்பட்டது இன நலச் சிந்தனை!

இந்திய அரசு உசாவல் (விசாரணைக்) குற்றவாளிகளுக்குச் செய்யும் கொடுமைகள்!

(சிங்களத்தில் தமிழர்களுக்குக் கொடுமைகள் நேர்வதைச் செய்தித் தாள்களில் படித்துத் துடிப்புறுகிறோம். இந்தியாவில் மட்டுமென்ன வாழ்கிறது? படித்துப் பாருங்கள்.)

உசாவல் குற்றவாளிகளைப் பலவாறு உறுப்புச் சிதைவு செய்வது, அவர்களின் கண்களில் எரியத்தை (திராவகத்தை) ஊற்றிக் குருடாக்குவது போன்ற செய்திகள், சிறிது காலமாகச் செய்தியிதழ்களில் வெளிவந்து, மக்களின் மனத்தில் சிறிதளவு விழிப் புணர்வை ஏற்படுத்தியது. அற மன்றங்கள், குறிப் பாகத் தலைமை அற மன்றங்கள், தங்கள் கவனத்தை இத்தகைய கொடுமைகளின் மேல் திருப்பின. அரசி யல்காரர்கள் பொது மேடைகளில் இவை பற்றி உருக்கமாகப் பேசினார்கள்.

இந்த இரைச்சலின் விளைவாகக் காவலர்கள் ஊசிகள், எரியப் புட்டில்கள் போன்றவற்றைச் சில காலம் தங்கள் பெட்டிகளில் போட்டுவிட்டுக் கொட்டடிக்குத் திரும்பினார்கள். ஆனால் இத்துடன் எல்லாம் முடிந்துபோய் விட்டதாகக் கூற இயலாது. ஏனெனில் பகல்பூர் நிகழ்ச்சிக்குப் பிறகும், பீகார் சிறை, தில்லிச் சிறுவர்கள் பாதுகாப்புப் பள்ளி போன்றவற்றின் நிலைமைகளில் எள்ளளவும் மாற்ற மேற்பட்டு விடவில்லை. இத்தகைய சீர்கேடான நிலைகளை மாற்றுவது குறித்து மக்கள் தங்கள் கவனத்தைத் திருப்புவது மிகவும் இன்றியமையாதது.

ஏனெனில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இத் தகைய நிலைமைகள் இந்தியாவில் சிற்சில பகுதிகளில் மட்டுமே இருந்து வந்தன. இவற்றால் தாக்கப் பெற்றவன் ஒரு சிறு குற்றத்திலாவது ஈடுபட்டவனாக இருந்திருப்பான். ஆனால் இன்றைய நிலையோ எந்த ஒருவரையும், அரசு நினைத்தால், உசாவல் குற்ற வாளியாக மாற்றிவிடக் கூடிய அஞ்சத்தக்க நிலையில் உள்ளது.

பொதுவாக, அரசானது, தனது நேரத்தையும் கருவிகளையும் மாந்த உரிமைகளைக் காப்பதற்குச் செலவிட விரும்புவதில்லை. மாறாக, போலியான பொதுவுடைமை, மதச் சார்பின்மை. குடியரசு போன்ற பெரிய சொற்றொடர்களைப் பேசி, மக்களை ஏமாற்றுவதோடு, அவர்களுக்கு எதிரான நடவடிக் கைகளையே மேற்கொண்டு வருகிறது. அரசு 1984 சூலை 14 ஆம் பக்கலன்று கொண்டுவந்த தீவிர நட வடிக்கையாளரை ஒடுக்கும் ஆணையின் மூலம் (Terrorist affected areas Ordinance) அடக்குமுறை யைச் சட்ட முழுமையாக்கியது. இதற்கொரு தகுந்த எடுத்துக் காட்டாகும்.

அதன்படி நீங்கள் யாராக வேண்டுமானாலும் (பேராயக்கட்சி ஆதரவாளரோ, சி. பி. எம். -காரரோ அல்லது என். டி. இராமராவ் போல் புகழ்பெற்ற திரைப்பட நடிகராகவோ கூட) இருக்க லாம். ஆனால், அரசுக்குப் பிடிக்காது போனால், தீவிர நடவடிக்கையாளர் என முத்திரை குத்தப்பட்டு, இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை உங்களுக்கு வழங்கப்படலாம்.

உசாவல் குற்றவாளிகள் :

உசாவல் குற்றவாளிகள் என்போர் யார்? அவர்கள் காவலில் இருக்கும்பொழுது எவ்வாறு நடத்தப் படுகின்றனர்? சிறையில் அவர்களின் நிலை என்ன என்பது போன்ற கேள்விகளுக்கு விடை கண் டாகவேண்டும்.

உசாவல் குற்றவாளிகள் என்போர் அரசு ஐயப் படும்-அரசுக்குப் பிடிக்காத எந்த ஆளாக வேண்டு மானாலும் இருக்கலாம். வழக்கு முடிந்து தீர்ப்பாகும் வரை அவரின் நிலை உசாவல் குற்றவாளி (விசாரணைக் குற்றவாளி) என்பதாகும், ஆனால் அவர்களின் நிலையோ மிகவும் இரங்கத்தக்கது. அண்மைக் காலத் தில் செய்தியிதழ்களில் வெளிவந்த உசாவல் குற்ற வாளிகளின் நிலைபற்றிய விளக்கங்கள் கீழே கொடுக் கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, 1. கிழக்கு சாமரானில் வாழும் முகம்மது மியானின் இடத்தில் நீங்கள் இருந்திருப்பீர்களானால், உசாவுதல் எதுவும் இன்றி, 33 ஆண்டுகள் சிறையில் கழித்து இருப்பீர்கள்.

2 பாட்டியாலாவில் வாழும் சீமோ (பெண்) இடத்தில் நீங்கள் இருந்திருந்தால், நீங்கள் கட்டிலில் கால்களை விரித்துக்கட்டி வைக்கப்பட்டு, மூன்று காவலர்களால் இரண்டு நாள்கள் விடாமல் மாறி மாற்றிக் கற்பழிக்கப் பட்டிருப்பீர்கள்.

3. அல்லது தேவம்மா போல் பம்பாய் காவல் நிலையத்தில் உறுப்புச் சிதைவு செய்யப்பட்டு இருப் பீர்கள்.

4. அல்லது, 16 அகவை பருக் இடத்தில் இருந் திருந்தால், உங்களைத் திகார் சிறைக் குற்றவாளி களுடன் தன்னினப் புணர்ச்சியில் ஈடுபடச் செய் திருப்பார்கள்.

5. அல்லது, ஏழுமலை போன்று சென்னை அருகே உள்ள மீஞ்சூர் காவலில் கொல்லப்பட்டுப் பிணத்தை மறைத்துக் குடும்பத்தினருக்கு ஒரு கிழமை கழித்து அறியச் செய்யப்பட்டு இருப்பீர்கள்.

6. மணிப்பூரில் உள்ள ஆசிரியர்களான பால், டேனியல் போன்று, உங்கள் குடும்பத்தினருக்கும், உங்களுக்கும் என்ன நேர்ந்தது என்று தெரியாதபடி படைத் துறையினரால் கொல்லப்பட்டுஇருப்பீர்கள்.

இதுபோன்ற நேரங்களில் தலைமை நெறிமன்றத் தின் இசைவும் கூட உங்கள் பிணத்தை வெளிக் கொண்டு வரமுடியாது.

7. இந்தர்சிங் போன்று காவலர் துறையைச் சார்ந்தவராகவே இருந்தாலும், உங்களைத் தவறான குற்றத்திற்காகச் சிறை செய்து, உங்கள் காவல் நிலை யத்திலேயே வாயுரை மூலம் கிடைக்கும் வரை, உங்களைத் தலைகீழாகத் தொங்கவிட்டு, உங்கள் அடிப் பாதத்தின் தோல்கள் கிழியும் வரை அடித்து நொறுக்கப்பட்டு இருப்பீர்கள். 8. படைத்துறையில் பணிபுரியும் குஞ்சலாசர் இடத்தில் இருந்திருப்பீர்க ளானால், நீங்கள் காவல் செய்யும் மிகப் பாதுகாப் பான இடத்திலிருந்து காணாமல்போன சில பொருள் களுக்காகக் குற்றம் சாட்டப்பட்டு, மூடு காலால் மிதிபட்டும், இரும்புக் கம்பிகளால் அடிபட்டும், தோல்கள் வெண் சுருட்டு (சிகரெட்) நெருப்பால் கருக்கப்பட்டும், அரத்த வாந்தி எடுக்கும்வரை அடித் திருப்பர். மறுநாள் உங்கள் பிணம் சுடுகாட்டில் எரிக் கப்பட்டு, உங்கள் மனைவிக்கு நீங்கள் மாரடைப்பால் இயற்கை எய்திய செய்தியைத் தலைமை அலுவலகம் அனுப்பிவைக்கும். அதனுடன் உருபா 5,000-க்கான காசோலை சில மாதங்கள் கழித்துக் கிடைக்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக உங்களைக் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று, உங்கள் குற்றம் என்ன என்று உங்களுக்குத் தெரியப்படுத்தப் படாம லேயே அங்கு வெகு நேரம் அமர்த்தப் படுவீர்கள். அங்கே காவலர்கள் உங்களைத் திட்டலாம்; அறைய லாம்; அடிக்கலாம். நீங்கள் ஒன்றும் அறியாதவ ராக இருந்து, அவர்களின் கேள்விகளுக்கு நிறை வான விடைகளை அளிக்கமுடியாமல் போனால், உங்களை என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம்.

நீங்கள் பெண்ணாக இருந்தால், உங்கள் நிலை மிகவும் இரக்கமானது. உங்கள் மார்பகங்களை வெண்சுருட்டு (சிகரெட்டு) நெருப்பு பதம்பார்க்கும்; கற்பழிக்கப்படலாம். உங்கள் பிறப்புறுப்புகளில் கம்பு நுழைக்கப்படலாம். நீங்கள் தப்பியோடிச் செய்தித்தாள் அலுவலகத்திற்கோ காவல்துறை உயர் அதிகாரிகளிடமோ சொல்ல நேர்ந்தால் உங்களுக்கு விலைமகள் பட்டம் வழங்கப்படும். காமப் பசி கொண்டவள் என்று குற்றம் சாட்டப் படுவீர்கள், போலியாக நடத்தப்படும் மருத்துவ ஆய்வு அறிக்கையும், காவலரின் குற்றச்சாட்டை மெய்ப்பிப்பதாகவே அமையும். அதன்பின் நீங்கள் சிறையில் அடைக்கப்பட்டால் சிறை அதிகாரிகளுக்கு கொத்தடிமை போன்று பணிபுரிய வேண்டும். அவை களுக்குச் சமைக்கவும், கழிவறைகளைக் கழுவிவிடவும் அவர்களுக்கு உடல் அமுக்கிவிடவும் உங்களைப் பயன் படுத்துவார்கள். நீங்கள் இளமையாக இருக்க நேரிட் டால், குடிகாரர்களாலும், அகவையாலவர்களாலும் கற்பழிக்கப்படலாம். உங்களுடன் உங்கள் மகளும் சிறையில் அடைக்கப்பட நேர்ந்தால், உங்கள் கண் ணெதிரிலேயே அவளும் கற்பழிக்கப்படுவாள். உங்க ளுடன் அவளும் புணர்ச்சியில் ஈடுபடக் கட்டாயப் படுத்தப்படுவாள்.

இந்த நிகழ்ச்சிகள் கேட்பதற்கு நம்பமுடியாத வையாக இருக்கலாம். ஆனால், இவை ஒவ்வொரு நிமையத்திலும், ஒவ்வொரு நாளும், எண்ணிக்கை யில் அடங்கா ஆயிரக்கணக்கான மக்களுக்கு எதி ராகத் தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் கேடு முறை களே. இந்த நாகரிகக் குமுகாயத்தில் இத்தகைய அத்துமீறல்களைப் பற்றிச் சற்றும் அக்கறை கொள் ளாது, உணர்வற்றுப்போய் இருக்கிறோம். ஏனெனில் இவை இப்போது இயல்பான பொதுச் செய்திகளாகி விட்டன. மேலும் நம் சிந்தனையில் ஏற்பட்டுள்ள ஒருவகையான நம்பிக்கைத் தளர்ச்சி, இத்தகைய சூழல்களை மாற்றிவிட முடியும் என்னும் முயற்சிகளை முறியடித்து வருகிறது. இது மிகவும் கேடான ஒரு மன நிலையாகும்.

ஒடுக்குதலின் சில துயரக்கதைகள் :

சியாம் சுந்தர் மிசரா, உ. பி-யில் உள்ள கிட வாவில் பொறியாளராகப் பணிபுரிந்தவர். 1957 இல் கொலைக் குற்றம் (தவறாகச்) சாட்டப்பட்டு, ஆனால் அறமன்றத்திற்குக் கொண்டு செல்லப்படாமல் மன நோயுற்றவர் என்று கூறி, 26 ஆண்டுகள் 4 மாதங் கள்] சிறை வைக்கப் பட்டார். நான்கு ஆண்டு களுக்கு முன், அவருடைய மருமகளால் கிடவா அற மன்றத்தில், முறையிடப்பட்ட பிணையம் வேண்டு கோள் தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர் உள் துறை அமைச்சகத்திற்கு வேண்டுகோள் செய்யப் பட்டு, 11 மாதங்கள் கழித்துச் சென்ற ஆண்டு அவரின் 62 ஆம் அகவையில், கண் பார்வையற்றவ ராக, நோயுற்று, மனைவியை இழந்தவராய், அவர் வெளி உலகிற்கு அழைத்துவரப் பட்டார்.

இராதுல் சா என்பவரின் வழக்கு இன்னும் இரங்கத் தக்கது. அவர் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில், குற்றவாளியல்லர் எனத் தீர்ப்பளிக்கப் பட்ட நாள், சூன் 3, 1968. ஆனால் விடுதலை செய் யப்பட்டதோ அக் 16, 1982. ஆக 14 ஆண்டுகள் விடுதலை ஆணை பெற்றும் சிறைக்குள் வைக்கப்பட் டிருக்கிறார். இந்தச் செய்தி நடுவர்களின் கவனத் திற்கு நவ 22, 1982 அன்று கொண்டுவரப்பட்டது. அறமன்றம் இராதுல் சா-வைச் சட்டத்திற்கு மாறாகக் காவலில் வைத்திருந்ததைக் கண்டித்து அதற்கான இழப்பீட்டை வழங்குமாறு கட்டளை யிட்டது.

[தொடரும்]

(3-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

குற்றச்சாட்டுகளைத் தேடிக் கண்டு பிடித்துப் பெரிது படுத்தியிருக்கும் நிலையைக் கண்டு மனம் வெதும்பினோம்.

அழிந்து வரும் தமிழ்இன உணர்வை அழியாது காக்கும் பணிக்கு அரசியல் துறையில் எவர் உறு துணையாவாரோ அவரையே இழிப்பதும் பழிப்பதும் எந்த வகையிலும் நேர்மையானதாகாது.

விலை உயர்வுப் போராட்டம், கலைஞர், பேரா சிரியர் இருவரும் ஈழத்தமிழர் பிரச்சனைக்காகப் பதவி துறந்தது போன்றவற்றை இழித்துக்கூறல் ஏற்றுக் கொள்ளமுடியாதவை தோற்றுவிட்டனர் என்பதற் காகக் குத்திக்காட்டியே நமது கருத்துகள் மேலா னவை என்று கூறுதல் சரியாகுமோ?

நம்மவர் தோற்றுப்போனாரே—நமது பணி இன்னும் கடுமையாயிற்றே என்ற பதைப்பைவிட நீ தோற்பாய் என்பது எனக்குத் தெரியும் என்று கூறுவது எத்தகைய பேதைமை!

காரணங்கள் என்ற பெயரால் சில கற்பனைகளைக் கூறிக்கொண்டு நெருங்கிவர முடியாத அளவிற்கு விரிசலை ஏற்படுத்துவது முறையன்று.—

இவற்றின் விளைவாக நடுவு நிலைமையை ஐயத் திற்குரியதாக்கி, தமிழ்நிலமும் எவரோ சிலரது சார்பில் உள்ளதுபோன்ற நிலையைத் தோற்றுவித்து விடவேண்டாம்.

தேர்தல் முடிவுகள் மாற்ற முடியாத, மாறாத முடிவுகளல்ல—அதற்காக அதனை அளவுக்கு மீறிப் பேசி மனங்களில் பிரிவு விதையை விதைக்க வேண்டாம்!

இவ்வண்ணம்

அ. கருணாகரன் மற்றும் தமிழன்பர்கள் பலர்,
தாராபுரம்

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN/MS(C)/657

அனுப்புதல்: பெறுநர். நூல்-அஞ்சல்
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு, திரு/திருவாட்டி
திருவல்லிக்கேணி
சென்னை—5

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.